Judicial Form No.53
(Sec.Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure/
XXV Bharatiya Nagarik Suraksha Sanhita)
In the Court of the Judicial Magistrate No.I, Poonamallee
CC.No.330/2024

Calendar )(
Miscellaneous )( Case No. of 202
Preliminary Register )(
Sessions
Deposition of witness for PW.2 (LW2) Prosecution
Defence
Court

Name :ராஜீவ்குமார்
Name S/O :சி.என்.சுகுமாறன்
Village :
Taluk :
Calling :
Religion : இந்தியன்
Age :
எதிரி ஆஜர் :எதிரிகள் 6,8,11 ஆஜரில் உள்ளார்கள்.
solemnly aaffirmed in accordance with the provisions of the Oaths Act 1969
(Central Act 44 of 1969 on the day of 30.04.2026

<u>8,9,11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எந்த வருடத்தில் falcon crowd strek fire wall எங்களது நிறுவனத்தில் பொருத்தப்பட்டது என்றால் 2023லிருந்து உள்ளது. 2011ல் எங்களது நிறுவனத்தை துவங்கிவிட்டு 2023ல் நாங்கள் fire wall பொருத்தியதற்கு காரணம் என்ன என்றால் அதற்கு முன்னர் சோனிக் wall fire wall பொருத்தப்பட்டிருந்தது. எதன் காரணமாக நாங்கள் falcon crowd strek fire wall மாற்றம் செய்தோம் என்றால் அதற்கு அட்வான்ஸ் டெக்னாலஜி இருந்ததாலும் அதன்விலை காரணமாகவும் கஷ்டமர் சப்போர்ட் காரணமாகவும் மாற்றினோம். 2022 முதல் 2023 க்குள் எங்களது நிறுவனத்தில் கம்ப்யூட்டர்கள் 2,3 முறை ேஹக் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எங்களது நிறுவனத்தில் ேஹக் செய்யப்பட்ட காரணத்தினால் நாங்கள் எங்கள் அலுவலக ஊழியர்களை அவர்களது தனிப்பட்ட

மின்னஞ்சல் வாயிலாக பணி செய்ய சொன்னோம் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் ஊழியர்கள் அவர்களது மின்னஞ்சல்களுக்கு டேட்டாக்கள் பரிமாற்றம் செய்து பணி செய்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் எல்லோரும் வேலையை விட்டு சென்றுவிட்டதால் அதைக்காரணம் காட்டி அவர்கள் மீது வழக்கு தொடர்ந்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் 8,9,11 ஆகியோர்களில் யார் அவர்களது பணியில் இருந்து விலகிக்கொண்டார்கள், யாரை நாங்கள் பணிநீக்கம் செய்தோம் என்றால் அவர்கள் மூவரும் பணியில் இருந்து ரிசைன் செய்துவிட்டு சென்றார்கள். 9 ம் எதிரி கிருஷ்ணதாஸ் கொரோனா காலத்திற்கு பிறகு மீண்டும் பணிக்கு சேருகிறேன் என்று கேட்டபின்னரும் நாங்கள் அவரை பணியில் சேர்க்காமல் பணி நீக்கம் செய்துவிட்டோம் என்றால் 2022 லிருந்து 2024 வரை அவர் எங்கள் நிறுவனத்தில்தான் வேலை பார்த்தார். 2024 ல் எங்கள் நிறுவனத்தில் வேலை பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவர் மீது புகார் அளித்துவிட்டோம் என்றால் அவர்மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை. விசாரணயில்தான் அவரது செயல் கண்டுபிடிக்கப்பட்டது.

22.08.2023 அன்று நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் எதிரி கிருஷ்ணதாஸ் மீது விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சந்தேகமிருப்பதால் கூறினேன். அவர்மீது சந்தேகம் இருந்தாலும் அவரை பணியில் வைத்திருந்தேன் என்றால் சரிதான். 2023 ல் ஏப்ரல் மாதத்தில் அவரை பணியிலிருந்து அனுப்பிவிட்டோம் என்றால் அவரை நாங்கள் பணியில் இருந்து அனுப்பவில்லை. அவரேதான் பணியில் இருந்து விலகிக்கொண்டார். அவர் உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தினால் வேலைக்கு வராமல் இருந்துவிட்டு அதன்பின்னர்தான் பணியில் இருந்து விலகிக்கொண்டார். அவர் 2024 ல் எங்களிடத்தில் வேலை செய்யவில்லை என்றாலும் ஏப்ரல் 2023 ல் வேலையிலிருந்து சென்றுவிட்டார் என்றால் எனக்கு 2024 ல் அவர்போனதாகதான் ஞாபகத்தில் உள்ளது. அதற்கு முன்னரே போனாரா என்று ஆவணங்களைப்பார்த்துதான் என்னால் சொல்லமுடியும்.

எங்கள் நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களிடமும் என்டிஏ கையொப்பம் பெறுவோம் என்றால் சரிதான். என்டிஏ பெறுவதற்கான காரணம் கான்பிடன்சியல் டேட்டாக்களை வெளியிடாமல் இருப்பதற்கு என்றால் சரிதான். 2,3,6,11 எதிரிகளுக்கு உரிய என்டிஏ மட்டும்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அனைவருக்கும் என்டிஏ உள்ளது விடுபட்டிருந்தால் அதனை என்னால் தாக்கல் செய்யமுடியும். 8 மற்றும் 9 எதிரியின் என்டிஏ ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அதைக்குறித்து தெரியவில்லை. தேவைப்பட்டால் சமர்ப்பிக்கிறேன். என்டிஏ ஒப்பந்தத்தில்

எங்கள் நிறுவனத்தின் ஸ்டேண்டர்டு ஆப்ரேட்டிங் புரசிஜரை உட்படுத்தியதாக குறிப்பாக குறிப்பிடவில்லை என்றால் அதில் நிறுவனத்துக்கு சந்தமான எந்த ஒரு டேட்டாக்களையும் சொந்த பயன்பாட்டிற்கோ அல்லது வணிக ரீதியாக பயன்பாட்டிற்கோ பயன்படுத்தக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா கான்ட்ராக்ட் சட்டம் பிரிவு 27 ன்படி ஒப்பந்தங்களை குறிப்பாக தெரிவிக்க வேண்டும் என்று உள்ளது என்றால் எஸ்ஓபி என்பது ஜெனரிக் டேட்டா கிடையாது. கம்பெனியின் டேட்டாவாகும். கிளைண்ட் விபரங்கள் அனைத்தும் கம்பெனிக்கு சமமந்தப்பட்ட டேட்டா ஆகும். அனைத்து டாக்டர்களுக்கும் எங்களது எஸ்ஓபி பயன்படுத்துகிறோம் என்றபோது அது ஜெனரிக் டேட்டா என்றால் எஸ்ஓபி என்பது எங்களால் உருவாக்கப்பட்டது, எங்கள் மெடிக்கல் பில்லிங் தொழில் செய்வதற்கு எங்களால் உருவாக்கப்பட்டது. மேற்படி எஸ்ஓபி ஆவணத்தை 8,9,11 எதிரிகள் அவர்களது மின்னஞ்சலுக்கு அனுப்பியதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் 8,9,11 எதிரிகள் எஸ்ஓபி அனுப்பிக்கொண்டார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. எங்கள் நிறுவனத்தின் மற்ற விபரங்களை அனுப்பிக்கொண்டார்கள் என்றுதான் சொல்கிறோம். வேறு என்ன டேர்க்களை எடுத்துக்கொண்டார்கள் என்றால் எங்கள் கிளைண்டுடைய எஸ்எஸ்என் குறியீடு எண் அக்ரிமெண்ட் காஃபி மற்றும் பல எங்கள் கம்பெனிக்கு சொந்தமான டாக்குமெண்டுகள் கிளையண்ட் இன்சூரன்ஸ் குறியீடு எண், ஆகியவற்றை மாற்றிக்கொண்டுள்ளார்கள். இதனை எப்படி எடீடுத்துக்கொண்டுள்ளார்கள் என்றால் அவர்களது மின்னஞ்சல், வாட்ஸ்அப், மூலமாக மற்ற எதிரிகளுக்கு மாற்றியுள்ளார்கள். நான் மேற்படி சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் இறுதி அறிக்கையில் சேர்த்து தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதைக்குறித்து விசாரணை அதிகாரிதான் சொல்லவேண்டும். இவ்வழக்கின் இறுதி அறிக்கையை நான் பார்க்கவில்லையா என்றால் பாத்திருக்கிறேன். ஒரு நிறுவனத்திலிருந்து வெளியே வந்தபிறகு பழைய நிறுவனத்தை சேர்ந்த நண்பர்களுடன் குரூப் வைத்திருந்தால் அது தவறு கிடையாது என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் வாட்ஸ்அப்பில் அதுபோன்று குரூப்பில் பேசிக்கொண்டதைதான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் அவர்களுக்குரிய தனிப்பட்ட விபரங்களை ஷேர் செய்து கொள்ளலாம், ஆனால் நிறுவனத்துக்குரிய ஆவணங்களை ஷேர் செய்ய முடியாது. அவ்வாறு ஒரு வாட்ஸ்அப் குரூப் உள்ளது என்று எனக்கு எப்படி தெரியவந்தது என்றால் விசாரணை அதிகாரிதான் கண்டுபிடித்தார்.

ஒரு நிறுவனத்தில் பணியாற்றும்போது அங்கு பணியாற்றியதில்

கிடைக்கக்கூடிய எக்ஸ்பீரியன்ஸ்களை அழிக்க முடியுமா என்றால் அது தனிப்பட்ட ஒருவரின் அறிவைச்சார்ந்தது. இவ்வழக்கானது உரிமையியல் சம்மந்தப்பட்டது, அதனை குற்றமாக வழக்குகொடுத்துள்ளோம் என்றாலும் போர்டு ரிசொலியூசன் போடாமல் இவ்வழக்கில் புகார் கொடுத்தது செல்லத்தக்கது அல்ல என்றாலும் இந்த வழக்கு முழுவதும் அனுமானத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Sdx/–Tmt.M.Amudha
Judicial Magistrate No.I
Poonamallee